[19th July 1957

SRI S. LAZAR : Sir, may I know whether the steps taken by Government to control rise in price of rice are steps meant to prevent the middleman from making huge profits or do the steps affect the interest of the producers.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the object of opening fair price shops, as I once before explained, is not merely with the idea of checking the rise in prices, it is more to enable the poor people to purchase rice at lower prices. If the hon. Member would bring to my notice any cases of middlemen making money without benefiting the poor men, I shall certainly take necessary action in the matter.

SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, நியாய விலைக் கடைகளில் விற்கப்படுகிற அரிசி பெரும்பாலும் நாற்றம் பிடிக்க ஏதுவாக இருக்கிற முறையில் இப்போது ஸ்டாக் வைக்கும் முறை இருப்பதாக அறிகிறேன். ஏனென்றால் நான் சென்னை நகரில் அரிசி வாங்கியபோது அது மிகவும் நாற்றம் அடித்தது. இதைப்பற்றி விசாரித்தபோது தான் ஸ்டாக் வைக்கும் முறையினால் இந்த நாற்றமும் ஏற்பட்டுவிடுகிறது எனத் தெரிவதனால் அவ்வப்போது மக்களுக்கு நல்ல அரிசியைக் கொடுப்பதற்கு வசதியாக, ஸ்டாக் வைக்கும் முறையை திருத்தி அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கூடிய வரையில் நாற்றம் இல்லாத அரிசியைக் கொடுக்க ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது. அதோடு மேலும் மேலும் நியாய விலைக் கடைகளைத் திறக்கவேண்டுமென்ற கோரிக்கை மக்களிடத்தில் இருந்து வந்துகொண்டிருப்பதனாலே நியாய விலைக் கடைகளில் கொடுக்கும் அரிசி நாற்றம் அடிக்கக்கூடியதாக இருக்கும் என்று நான் கருதவில்லை.

SRI T. KARIA GOUNDER : விலை கட்டுப்பாடு வேண்டுமென்று எல்லா மெம்பர்களும் கேட்கிறார்கள். நூற்றுக்கு 80 சதவிகிதம் உள்ள விவசாயிகளின் நலனைக் கருதி உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விலை நிர்ணயிப்பதோடு உற்பத்திச் செலவையும் கட்டுப்படுத்த ஏதாவது கவனம் செலுத்துவார்களா ? செலவைக் குறைக்க ஏற்பாடு ஏதாவது எடுக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன். ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறதென்பது உண்மைதான். தற்போது விலையைக் குறைக்க வசதி இல்லை என்று அரசாங்கம் நினைக்கிறது.

Old manuscripts in the Maharaja's Palace in Tanjore.

* 145 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any research has been conducted into the old manuscripts kept in the Maharaja's Palace in Tanjore; and

(*b*) whether any valuable scripts have been found?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) It is presumed that the manuscripts referred to by the hon. Member are the records of the Tanjore Raj which became extinct in 1855 and which were housed in the Tanjore Palace. If the presumption is correct no one has conducted any historical research among them chiefly

19th July 1957]

because they are written mostly in Modi, a language with which very few persons in this State are acquainted. They have, however, been examined with the help of competent Modi knowing persons specially obtained from Bombay and lists of them have been prepared. With the help of these lists, the papers which are of historical or administrative value have been separated and transferred for safe custody and proper preservation to the Madras Record Office where they are now at the disposal of persons who might wish to do bona fide historical research among them. The remaining papers which are not worthy of permanent retention have been transferred to the Tanjore Maharaja Serafoji's Sarasvathi Mahal Library, Tanjore. These can also be consulted by research students or scholars.

Sri N. S. RAMALINGAM : கனம் சபாநாயகர் அவர்களே, தஞ்சாவூர் அரண்மனையில் மோடி மொழியில் இருந்த சுவடிகளை மொழி பெயர்க்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது என்று சொன்னார்கள். அவ்வாறு மோடி மொழியில் இருந்து மொழிபெயர்க்கப்பட்ட சுவடிகள் சரியாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்க்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : மொழிபெயர்ப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பதாக நான் என் பதிலில் சொல்லவில்லை.

Srimathi T. N. ANANDANAYAKI : இப்படிப்பட்ட சுவடிகள் அன்னிய நாட்டினரால் வாங்கப்பட்டு, அன்னிய லைப்ரேரிகளில் இருக்கிறதென்ற புகார் வந்துகொண்டிருக்கிறதே, அதற்கு ஏதாவது ஆதாரம் உண்டா என்று கேட்கிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : அதைப் புகாராக எடுத்துக் கொள்ளவில்லை. அதை மிகவும் பெருமையாக எடுத்துக்கொண்டு அவைகளினால் நமக்கு அதில் உள்ள விஷயம் ஏதாவது கிடைக்குமானால் அதைக் கேட்டு அறிந்துகொள்வதற்கும் முயற்சி செய்வோம்.

Government Headquarters Hospital, Ootacamund.

* 146 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any new-born baby was carried away recently by a dog from the Government Headquarters Hospital, Ootacamund; and

(*b*) if so, whether the matter has been enquired into and responsibility fixed?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) A still-born baby which was kept for burial near the mortuary in the Government Headquarters Hospital, Ootacamund, was carried away by a dog for a short distance within the hospital premises.

(*b*) Yes. Suitable action has been taken against the sweeper of the hospital who had carelessly allowed the dog to carry the dead child.